**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE**

**Under Section 173 BNSS"** முதல் தகவல் அறிக்கை — INTEGRATED INVESTIGATION FORM-I

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ. பிரிவு 154-இன் கீழ்)~~

C 8102000

(signature) 28/10/24

1. District : மாவட்டம் RANIPET — PS: காவல்நிலையம் VGAC — Year: ஆண்டு 2024 — FIR No.: மு.த.அ. எண் 06/2024 — Date: நாள் 28/10/24

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: U/s 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 28/10/24 — Date to : நாள் வரை —
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 10.30 hrs. — Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS: Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28/10/24 — Time : நேரம் 15.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் IV Vol. — Time : நேரம் 15.30 hrs & 16.30 hrs on 28/10/24

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Type written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — North East 45 kms.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி O/o the Junior Engineer, TANGEDCO (O&M), Minnal,
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Sargunam — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Munusamy
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 6/7/80 — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் — — (g) Address : முகவரி No 84, Sirniya theru, Kakkan Colony, Melavatham, Anvarthikan Pettai, Arakkonam Tk, Ranipet Dist.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Krishnan, Foreman, O/o the Junior Engineer, TANGEDCO, (O&M), Vellore Electricity Distribution Circle.

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   As he went to look after some important work connected to the Srikailasanathar Temple. Hence delay.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 28/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi 28/10/24
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.VIJAYALAKSHMI
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
V&AC, RANIPET

பணிந்து அனுப்பப்படுகிறது: இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 28.10.2024 ஆம் தேதி 15.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.M.சற்குணம் (45/2024), த/பெ முனுசாமி, எண்.84, சிறிய தெரு, கக்கன் காலனி, மேல் ஆவதம், அன்வதிகான்பேட்டை, அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரின் புகார் மனுவை பெற்று பார்க்க, அனுப்புநர், M.சற்குணம், த/பெ முனுசாமி, நெ.84, சிறிய தெரு, கக்கன் காலனி, மேல்ஆவதம், அன்வர்திகான்பேட்டை அஞ்சல், அரக்கோணம் வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம் கைபேசி எண்.9943288107 பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை மாவட்டம். ஐயா, நான் இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம், மேல் ஆவதம் கக்கன் காலனியில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் M.Sc., M.Ed., வரை படித்துள்ளேன். நான் தற்போது வேலைக்கு எங்கும் செல்லவில்லை. மேல்ஆவதம் கிராமத்தில் உள்ள ஸ்ரீகைலாசநாதர் கோயிலில் திருப்பணிகளை செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகிவிட்டது. மனைவி பெயர் செந்தமிழ் செல்வி. எனக்கு அரவிந்தஹரிஹரன், நித்தீஸ்வரன் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். எனக்கு ராஜா, குமார், மோகன் என்ற அண்ணன்களும் நாகராணி என்ற அக்காவும் உள்ளனர். எனது மூன்றாவது அண்ணன் மோகன் என்பவர் அன்வர்திகான்பேட்டை கிராம சர்வே எண்.87A/1A, 1B, 1C மற்றும் 87B1-ல் உள்ள காலி மனை எண்.18-ஐ தேவகி மற்றும் அருள்மொழி ஆகியோரிடமிருந்து 08.10.2013 ஆம் கிரையம் பெற்றார். பின்னர் மேற்கண்ட மனையில் கடந்த 2023 ஆம் ஆண்டு வீட்டை கட்டி முடித்தார். அவர் சென்னை வியாசர்பாடியில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் காண்டிராக்ட் லேபராக உள்ளார். எனவே, அவர் அடிக்கடி மேல்ஆவதத்திற்கு வந்து செல்ல முடியாத காரணத்தால் அவருடைய வீடு கட்டும் வேலைகளையும், அது தொடர்பான வேலைகளையும் நான்தான் பார்த்துக்கொள்வேன். மேற்கண்ட வீட்டிற்கு புதிய சிங்கிள் பேஸ் மின் இணைப்பை பெற என் அண்ணன் மோகனும் நானும் 13.07.2024 ஆம் தேதியன்று மின்னல் மின்சார வாரிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளர் சுபாஷ் என்பவரை நேரில் சென்று பார்த்தோம். அவர் மின் வணிக ஆய்வாளர் அவர்களை பார்க்கும்படி தெரிவித்தார். பின்பு நாங்கள் மின் வணிக ஆய்வாளரை சென்று பார்த்து, நாங்கள் எடுத்து வந்த ஆவணங்களை அவரிடம் காண்பித்தோம். அவர் அந்த ஆவணங்களை சரிபார்த்துவிட்டு Online–ல் apply செய்துவிட்டு அந்த ஆவணங்களை கொண்டு வந்து தருமாறு சொன்னார். அதனால் அன்றே Online மூலம் விண்ணப்பத்து அதற்கான ரூ.5,192/-ஐ Online மூலம் செலுத்தினோம். பின்னர் என் அண்ணன் அவசர வேலையாக சென்னைக்கு செல்ல வேண்டியிருந்ததால், என்னை EB அலுவலகம் போகுமாறு சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதனால் நான் EB ஆபிஸ் சென்று Online விண்ணப்ப நகல், பத்திர நகல் மற்றும் இதர ஆவணங்களையும் இணைத்து மின் வணிக ஆய்வாளர் பெரியசாமி என்பவரிடம் கொடுத்தேன். அதனை சரிபார்த்துவிட்டு அவர் என்னிடம் உங்கள் வீட்டினை நேரில் வந்து பார்த்துவிட்டு மின் இணைப்பு தருவார்கள் என்று தெரிவித்தார். பின்னர் 30.07.2024 ஆம் தேதியன்று மின்

வணிக ஆய்வாளர் அவர்கள் என்னை செல்போனில் தொடர்புகொண்டு என்னை EB ஆபிஸுக்கு வர சொன்னார்கள். உடனே நான் அங்கே சென்றேன். அப்போது இளநிலை பொறியாளர் சுபாஷ், மின் வணிக ஆய்வாளர் பெரியசாமி ஆகியோர் என்னிடம் என் அண்ணன் மோகன் கட்டியுள்ள கட்டடத்திற்கு மேற்புறத்தில் லைன் போவதால் அதனை அப்புறப்படுத்தாமல் அதன் கீழே கட்டடத்தை கட்டியது தவறு என்றும் அதனால் என் அண்ணன் பெயரில் மேற்கண்ட வீட்டிற்கு மின் இணைப்பு வழங்க இயலாது என்றும், முதலில் மேற்கண்ட வீட்டிற்கு மேல் போகும் லைனை மாற்றியமைக்க விண்ணப்பித்து அதனை சரி செய்த பின்னரே மின் இணைப்புவிண்ணப்பத்தின்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் இல்லையெனில் விண்ணப்பத்தை ரத்து செய்துவிடுவேன் என்று சொன்னார்கள். அதற்கு நான் லைனை மாற்றியமைக்க என் அண்ணனிடம் சொல்லி விண்ணப்பிக்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். மறுநாள் 31.07.2024ஆம் தேதி மின் கம்பியை மாற்றியமைக்க வேண்டி Online-ல் என் அண்ணன் முலம் விண்ணப்பித்து அந்த நகலினை உரிய ஆவணங்களுடன் இணைத்து இளநிலை பொறியாளரிடம் நான்.சமர்பித்தேன். பின்னர் 16.08.2024 ஆம் தேதி அன்று என் அண்ணன் வீட்டிற்கு மேல்புறம் செல்லும் மின் கம்பியை மாற்றியமைக்க வேண்டி ஆய்விற்காக Commercial Inspector-ரும், Line Inspector-ரும் என் அண்ணன் வீட்டிடம் நேரில் ஆய்வு செய்துவிட்டு,லைனை மாற்றியமைக்க ஆகும் தோராய மதிப்பு தயார் செய்த பின்னர் தங்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும் என்று தெரிவித்துவிட்டு சென்றனர். பின்னர் 04.09.2024 ஆம் தேதி அன்று மீண்டும் உதவி செயற்பொறியாளர், இளநிலை பொறியார், Commercial Inspector, Line Inspector ஆகியோர் நேரில் வந்து ஆய்வு செய்தனர். பின்னர் நான் பலமுறை நேரில் சென்று பார்த்தும் எனக்கு முறையாக எந்த தகவலும் கூறாமல் காலம் தாழ்த்தி வந்தனர். பின்னர் 01.10.2024 ஆம் தேதி அன்று Estimate தயார் செய்த உத்தரவினை எனக்கு கொடுத்து அந்த பணத்தை கட்டுமாறு சொன்னார்கள். நான் அதை என் அண்ணனிடம் காட்டி அதில் குறிப்பிட்டிருந்த ரூ.18,430/-ஐ என் அண்ணனிடம் இருந்து வாங்கி 03.10.24 ஆம் தேதி மேற்கண்ட தொகையினை ஆன்லைன் முலம் கட்டினேன். பின்னர் Estimate தொகை செலுத்திய பிறகும் இன்னும் எந்த தகவலும் தெரியததால் 23.10.24 ஆம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு மின்னல் மின்சார வாரிய அலுவலகத்திற்கு சென்று இளநிலை பொறியாளர் சுபாஷ் அவர்களிடம் என் அண்ணன் வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டியது குறித்து கேட்டேன். அதற்கு அவர் Foreman–ஐ பார்த்துடுங்க நான் அவர்கிட்ட சொல்லிட்டேன் என்று என்னிடம் சொன்னார். பின்னர் Foreman-கிருஷ்ணன் என்பவரை கூப்பிட்டு என்னை காண்பித்து இவரது வேலையை முடித்து கொடுங்கள் என்று சொன்னார். பின்னர் Foreman அவருடைய சீட்டிடம் அழைத்து என்னை உட்காரவைத்து JE-க்கு ரூ.3,000/-மும், Foreman எனக்கு ரூ.2,000/-மும், Store-க்கு ரூ.3,000/-மும் கொடுக்க வேண்டும் என்றும் மொத்தம் ரூ.8,000/- எடுத்து வந்தால்தான் வேலை ஆகும் என்றும் சொன்னார். மேலும் இது வரையிலும் JE-க்கு எதுவும் கொடுக்கவில்லை JE சொன்னதாக சொன்னார். இந்த ரூ.8,000/- தவிர இன்னமும் பொருள் வாங்க பணம் எடுத்து கொண்டு வரும்படியும் வந்தவுடன் அரக்கோணம், நெமிலி சென்று தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு வரலாம் என்றும், அடுத்த நாள் வேலையாட்களை வரசொல்லி வேலை ஆரம்பிக்கலாம் கூலியாக தலைக்கு ரூ.500 ஆகும் என்றும் அதை என்னை

கவனித்துக்கொள்ளும்படியும் அந்த பணத்தை எடுத்துக்கொண்டு உடனே வரும்படியும் சொன்னார். நான் உடனே அவரிடம் அண்ணன் சென்னையில் இருப்பதாகவும் அவர் வந்தால் அவரிடம் கேட்டு வாங்கி வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் என் அண்ணனிடம் மேற்படி விவரங்களை சொன்னதற்கு அவர் தனக்கு லஞ்சம் கொடுத்து வீட்டிற்கு மின் இணைப்பு வாங்க விருப்பம் இல்லை என்றும் அவர்கள் மீது லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் தரலாம் என்றும் சொன்னார். நான் பின்னர் கோயில் வேலையாக சென்றுவிட்டதால் என்னால் உடனடியாக வந்து புகார் கொடுக்க முடியவில்லை. என் அண்ணனுக்கும் சென்னையில் வேலை இருந்ததால் அவராலும் வர இயலவில்லை. எனவே என் அண்ணன் மோகன் அவர்களின் வீட்டிற்கு மேலே செல்லும் லைனை மாற்றி அமைத்து, வீட்டிற்கு சிங்கிள் பேஸ் மின் இணைப்பு தர லஞ்சமாக மொத்தம் ரு.8,000/- கேட்ட Foreman கிருஷ்ணன் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என்னுடைய அண்ணன் மோகன் அவர்களுடைய புதியதாக கட்டிய வீட்டிற்கு 1) Domestic Residential மின் இணைப்பிற்காக ரு.5,192/-ஐ, 13.07.2024 ஆம் தேதியன்று செலுத்தியதற்கான இரசீது, 2) என்னுடைய அண்ணன் மோகன் அவர்கள் புதியதாக கட்டிய வீட்டிற்கு மேல் செல்லும் மின்சார கம்பி லைனை மாற்றியமைப்பதற்காக ரு.18,430/-ற்கான Demand Notice, நாள்:01.10.2024 மற்றும் 3) என்னுடைய அண்ணன் மோகன் அவர்கள் புதியதாக கட்டிய வீட்டிற்கு மேல் செல்லும் மின்சார கம்பி லைனை மாற்றியமைப்பதற்காக ரு.18,430/- ஐ 03.10.2024 தேதியன்று செலுத்தியதற்கான இரசீது ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd/-xxxxxx (M.Sargunam) 28.10.2024.

Sir,

Received the complaint on 28.10.2024 at 15.30 hrs., after due verification, Inspr. Tmt.S.Vijayalakshmi to Register a case. Sd/- xxxxxxxxxxx (V.Ganesan) 28/10/2024, Dy.Supdt. of Police, V&AC, Ranipet District.

Sir,

Received the complaint on 28.10.2024 at 15.30 Hrs. after verifying the antecedents of the accused and credibility of the complainant, I have registered a case in Ranipet V&AC Cr.No.06/2024 u/s 7(a) of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 28.10.2024 at 16.30 hrs. Sd/- xxxxx (S.Vijayalakshmi) 28/10/2024 Inspector of Police, Vigilance & Anti-Corruption, Ranipet.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

S. Vijayalakshmi
28/10/24

(S.VIJAYALAKSHMI),
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Ranipet.